Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருடம் ( 1889 ) ஆவணி மாதம் 28 ம் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்-கூங] யாழ்ப்பாணம்:- கரவருஷ ஆவணிமீ கஉ உ செவ்வாய்க்கிழமை (28 ஆகஸ்ட் 1951) [இல-சo]

## திருமுருகாற்றுப் படைச் சிறப்பு

திரு. வித்துவான். வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு

I

**நூலின் சிறப்பு**

இது சங்கத்துச் சான்றோர் செய்யுட்களில் பத்துப் பாட்டில் முதலாவதாகும்; சைவத் திருமுறைகளிலே பதினோராந் திருமுறையிலும் இது கோக்கப்பெற்றுளது; முந்நூற்றுப்பதினேழு அடிகளுள்ள ஆசிரியப் பாவால் அமைந்தது; முருகப் பெருமானின் திருவருள் பெறவிரும்பும் அன்பர்கள் அன்போடு நாள்தோறும் ஓதிப் பயன்பெற உதவுவது. இதன் சிறப்பை ஆன்றோர் பலரும் புகழ்ந்துள்ளனர்.

"வளவாய்மை சொற்பிரபந்த
முனகீ ராக்குவந்துன்
மலர்வா யிலக்கணங்கள் —
இயல்போதி
அடிமோனை சொற்கிலங்க
உலகா முவப்பவென்றன்
அருளா லளித்துகந்த—பெரியோ
[னே"

எனவும்,

"தேவிசை கூட்டி வேதமொழி
சூட்டு
கீரிசை கேட்ட க்ருபைவேளே"

எனவும் அருணகிரிநாதரும்,

"பாவுள் முன்னுறவந்துதிக்கும்
முருகாற்றுப்படை"

எனத் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளும்,

"தவிராத வெவ்வினை தவிர்க்கும்
முருகாறு"

என அந்தகக்கவி வீரராகவமுதலியாரும் * இதனைப் புகழ்ந்துள்ளமை காண்க.

**நூலின் வரலாறு**

தருமியின் பொருட்டுச் சிவபெருமான் எழுதி ஈந்தருளிய கொங்குதேர் வாழ்க்கை என்ற பாடல் பொருட்குற்றமுடைத்து,— மகளிர் கூந்தலுக்கு இயற்கை மணம் உளது என்று அப்பாட்டின்கண் குறித்தது பிழையாம் என்று இறைவனோடு வாதாடிய காரணத்தால் 'குட்டநோய்' உறுக எனச் சாபம்பெற்ற நக்கீரனார், அச்சாபநீக்கத்தின் பொருட்டுக் கயிலைக்குச் செல்லும் வழியில் ஒரு மலைக்குகையிலே முன்னமே அடைக்கப்பட்டிருந்த தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரோடு சேர்த்துண்ணக் கருதித் தம்மையும் அடைத்து வைத்து நீராடச்சென்ற பூதத்தினின்றும் உய்யக்கருதி முருகக்கடவுளைக் குறித்துப் பாடியது இந்நூல் என்று கூறுவர். இவ்வரலாறு திருப்பரங்குன்றப் புராணம், திருவிளையாடற்புராணம், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் முதலிய நூல்களிற் கூறப்பட்டுள்ளன.

* ["பொய்யற்றகீரன் முதலாம்
புலவோர் புகழ்ந்த,
ஐயற்கெனது சிறுசொல்லு
மொப்பாகும் .... ...."
— கச்சியப்ப சிவாசாரிய
சுவாமிகள்]

**பெயர்ப்பொருள்**

திருமுருகாற்றுப்படை என்பதற்கு வீடுபெறுதற்குச் சமைந்தானோர் இரவலனை வீடுபெற்றானொருவன் முருகக் கடவுளிடத்தே ஆற்றுப்படுத்தது என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் பொருள் கூறியுள்ளார். ஆற்றுப்படை என்பது தமிழிலுள்ள பலவகைப் பிரபந்தங்களில் ஒன்று. தொல்காப்பியம் புறத்திணையியலில்,

"கூத்தரும் பாணரும் பொருநரும்
விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத்
தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்
கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன
பக்கமும்"

என்பது இதற்கு விதி.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## ஒன்றை நினைக்கப் பிறிதொன்றாய் முடிந்தது

பொரளையில் வசித்த 18 வயதுப் பிராயமுள்ள தயாவதி யென்னுங் கன்னிகைக்குக் கல்யாணம் நிறைவேறுவதற்கு இரண்டு தினத்திற்கு முன் அவளுக்கு நிச்சயிக்கப்பட்ட மாப்பிளளை பெண்வீட்டில் வந்திருந்தார்; அவர் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர். அவர் வரவைக் கண்டுபோலும் காதலி அவர் பொருட்டு ஏதோ ஆகாரஞ் சமைத்துக் கொண்டிருக்கும்போது, அவள் கையிலணிந்திருந்த "ஆலோய்" வளையல் நெருப்புப்பற்றி எரிகநூருகத் தொடங்கவே, அவள் பதைபதைத்து வளையலை அகற்ற முயன்றபோது, பக்கத்தில் எரிந்துகொண்டிருந்த மண்ணெண்ணெய்ப் போத்தல் விளக்கு தட்டுண்டு வீழ்ந்தமையினால் அவளது உடையினுங் நெருப்புப் பற்றிவிட்டதாம்; நெருப்பை அவித்துவிட்டுக் கன்னிகையை வைத்தியசாலைக்குக் கொண்டுபோனபோது அவள் மரண்டாளாம்.

## நிலமுற்ற நிலையில் 132 பள்ளிக்கூடங்கள்

இலங்கையிலுள்ள வித்தியாசாலைக் கட்டடங்களை வித்தியா பகுதி விசாரணைச் சபையார் போய்ப் பார்த்தபோது 132 பள்ளிக்கூடங்கள் மிகக் கிலமான நிலையிற் காணப்பட்டனவாம்; அவற்றிற் பலவற்றைத் திருத்திக் கட்டுவதற்கும் சிலவற்றைப் புதியனவாகக் கட்டுதற்கும் வித்தியாபகுதியார் முயற்சி செய்கின்றனராம்.

## திருக்கோணமலையிற் கண்டெடுத்த மூர்த்திகள்

சென்ற ஆண்டிற் புதைபொருளாகத் திருக்கோணமலையிற் கண்டெடுக்கப்பட்ட, தியாகராஜர், தேவி, சிவன் ஆகிய மூன்று மூர்த்திகளும் வெள்ளவத்தையில் இருந்து பலவூர்களுக்கும் எழுந்தருளச் செய்து, ஈற்றில் திருக்கோணமலைக் கோவிலிற் கொண்டுபோய்ச் சேர்க்கப்படுமாம்.

## சக்கரப்பள்ளித் தலச்சிறப்பு

திருச்சக்கரப்பள்ளி என்பது காவிரி நதியின் தென்கரையிலுள்ள 17-வது தலம். இது சிவரகசியம், பிரமகைவர்த்த புராணம், இலிங்க புராணம் முதலியவற்றால் மிகவும் சிறப்பாகப் பாராட்டியுள்ள ஏழுபதிகளுள் ஒன்று. ஏழுபதிகளாவன: சக்கரப் பள்ளி, அரிமங்கை, சூலமங்கை, நந்திமங்கை, பசுபதிமங்கை, தாழமங்கை, புள்ளமங்கை என்பன. இவை முறையே பிராமி, மாகேச்சுரி, கௌமாரி, வைணவி, வாராகி, மாகேந்திரி, சாமுண்டி என்னும் ஏழுமங்கையர்களாற் பூசிக்கப்பெற்றதனால் சப்தமங்கைத் தலங்கள் என்று வழங்கப்பெறுவன. சக்கரப்பள்ளியைப் பூசித்துப் பேறு பெற்ற காரணத்தாற் போந்த பெயர் என்றும், சக்கரவாகப்புள் பூசித்துப் பேறுபெற்றமையால் அப்பெயர் போந்ததென்றுங் கூறுவர். க்ஷேத்திரக் கோவைத் திருப்பதிகங்களில் முறையே 'வளசக்கரம் மால் உறைப்பால் அடிபோற்றக் கொடுத்த பள்ளி' எனவும் 'புலக்கழியச் சலந்தரனைப் பிளந்தான் பொற்சக்கரப் பள்ளி' எனவும் ஞானசம்பந்தப்பெருமானும் நாவுக்கரையர் பெருமானும் போற்றியிருக்கின்றார்கள். மற்றையவை திருமால், அத்திரிதேவர், திருநந்திதேவர், காமதேனு, சந்திரன், பிரமதேவர் இவர்களால் முறையே பூசிக்கப்பெற்றன. திருச்சக்கரப்பள்ளியும் திருப்புள்ளமங்கையும் ஞானசம்பந்தப்பெருமான் தேவாரம் பெற்றன. பசுபதி மங்கை கோச்செங்கட்சோழ நாயனார் எடுத்த மாடக்கோயில்களுள் ஒன்று. இவ்வேழு தலங்களுக்கும் பொதுவான தேவாரதம் என்னும் தீர்த்தமும் உண்டு. நாதசர்மா என்பவர் தம் மனைவியோடு நியமமாக ஒருநாள் இவ்வேழு பதியையும் வணங்கிப் பேறுபெற்றனர் என்பர்.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## தோத்திரம்

உ

பண் – கொல்லி
திருச்சிற்றம்பலம்

படையினர் வெண்மழுப் பாய்புலித் தோலரை
உடையினர் உமையொரு கூறனர் ஊர்வதோர்
விடையினர் வெண்பொடிப் பூசியார் விரிபுனல்
சடையினர் உறைவிடம் சக்கரப் பள்ளியே.

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்தசுவாமிகள்.

[ மழுப்படை - மழுவாகிய ஆயுதம்; அரை உடை - இடையில் தரிக்கும் ஆடை; ஒரு கூறனர் - ஒரு பாகமாக உடையவர்; விடை - இடபம்; பொடி - திருநீறு; விரிபுனல் - பிரவாகிய கங்கை. ]

## "நேருவையன்றி நில்லுங்கள்"

ராம்பூர் நவாப் தமது ஆதிக்கத்துக்குட்பட்ட ஒருகோடியே ஐம்பது லட்சம் இஸ்லாமியருக்கு, இந்திய பிரதமராகிய நேருவின் கொள்கைகளும் பரிபாலனமும் சுதந்திரத்தோடும் நீதியோடும் கூடியனவெனவும், பாகிஸ்தான் பரிபாலனம் அக்கிரமமுள்ளதெனவும் ஆனதால் அங்குள்ள இஸ்லாமியரும் இந்துக்களும் நேருவை யன்றியே நிற்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளாராம்.

## குமாரபுரம் ஸ்ரீ சித்திரவேலாயுதர் சம்பாபிஷேகம்

நிகழும் ஆவணி மீ கஅ உ (3-9-51) ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிக்கு நவோத்தாசத சங்காபிஷேகமும், பிற்பகல் 6 மணி தொடக்கம் சாதுக்களின் பஜனையும், அறிஞர்களின் உபந்நியாசங்களும், பின் திருவிழாவும் இன்னும் பல வைபவங்களும் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## சிறுமியின் கையைப் பற்றியதற்கு 20 ரூபா அபராதம்

கொழும்பிலுள்ள கலாசாலை ஒன்றிற் படிக்கும், 14 வயசுப் பிராயமுள்ள S. A. ஸ்ரெலியா என்னுஞ் சிறுமியும் அவள் தமக்கையும் இன்னுமொரு சிறுமியும் புறக்கோட்டை மார்க்கமாகப் பள்ளிக்கூடத்திற்குப் போகும்போது தொழிலாளர் கட்டுப்பாட்டுத் தானத்திற் சேவகனாகக் கடமை பார்க்கும் S. சாடிமீஸ் என்பவன் ஸ்ரெலியா என்னுஞ் சிறுமியின் கையைப்பற்றினன் என்ற குற்றச்சாட்டை கொழும்பு தெற்கு நீதஸ்தலத்தில் விசாரணை செய்து, நீதிபதி அவனை எச்சரித்து, குருடர் செவிடர் தரும தாபனத்திற்கு 20 ரூபா கொடுக்கும்படி கட்டளை செய்தார்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். கர ஆவணி மீ ௧௨ செவ்வாய்க்கிழமை

## பின்பற்றத் தக்கது

நல்லைக் கந்தசுவாமி கோவிலில் இன்று (28-8-51) இருபத்தோராந்திருவிழாவாகும்; இன்னும் நான்கு திருவிழா, பூங்காவனத்தோடு ஐந்து திருவிழாவுள்ளன; இவைகளும் உகந்த முறையில் விதிப்படி நடைபெறும்; இத் திருக்கோயிலில் முந்திய வருடங்களைக் காட்டிலும் இந்த வருடத்தில் மகோற்சவம் இன்னுஞ் சில சீர்களுடன் நடைபெறலாயின; காலந்தவறாது அவ்வக் காலங்களில் அபிடேக பூசைகளும், பகற்கால இராக்காலத் திருவிழாக்களும் நடைபெறுதல், தாசியர் நடனம் வாண வேடிக்கை யென்னுமிவைகளில்லாமை, மூர்த்திகளுக்குப் போலிக் கரம் கால வைத்துக் கட்டி ஆபாசமான முறையில் அலங்காரஞ் செய்யாமை முதலிய கிரமங்களெல்லாம் இந்த நல்லைக் கந்தன் கோயில் போல் வேறு எக்கோயிலினுமில்லை யெனலாம்.

இவைகள் மாத்திரமல்லாமல், வழிபடவரும் அடியார்பொருட்டு இக்குகாலயத்திற் செய்யப்பட்டுள்ள சௌகரியங்கள் பல; சுகாதாரப் பகுதியார் திருக்கோயில் வீதிகளை மாத்திரமல்லாமல்,கோயிலுக்கு வரும் நான்கு பக்கத்துள்ள தெருக்களையும் சுத்தமான முறையில் எந்தநேரமும் அமைத்துள்ளார்கள்; கும்பிடவரும் அடியவர்களுக்கு ஏதும் இன்னல் மரியாதைக் கேடு என்னுமிவைகள் நேராமற் சனங்கள் நெரியுண்டு தள்ளுண்டு இடிபட்டு இடர்ப்படாமல், களவு கொடாமல், ஒருவரோடொருவர் முரண்படாமற் பொலிசார் அவதானமாய் நின்று கடமையாற்றுகின்றனர்; நகரசங்கத் தலைவர் சுகாதாரப் பகுதியார் முதலானோரின் நன்முயற்சியினால் அடியார்கள் அல்லும் பகலும ஒலிபெருக்கி மூலமாகச் சற்பிரசங்கங்களையும் பத்திரசம் பயக்கும் அருட்பாக்களையும் இன்னிசையையுங் கேட்டு ஆநந்தமுறுகிறார்கள். வழிபட வந்தவர் தங்கள் குழந்தையைத் தவறவிட்டால், அணிந்திருந்த நகை, சால்வை முதலியவற்றை நழுவவிட்டால், அவற்றைப் பொலிஸ் தானத்தில் எடுத்து வைத்தபின் ஒலிபெருக்கிவாயிலாக விஷயம் அப்பொருள்களுக்குரியார்க்குத் தெரிவிக்கப்படுகின்றது.

காலந் தவறாது பகற் காலப் பூசை இராககாலப்பூசை இருகால உற்சவங்கள் கிரமமாக முறைப்படி நடப்பதெல்லாம் மேற்படி கோயில் ஆதினகர்த்தரின் நிர்வாகத்திறமையைப் பொறுத்தனவாகும்; திருக்கோயில் மகாமண்டபத்துள் முந்தி ஆண்கள் பெண்கள் புகுந்து வணக்கஞ் செய்வதும், அர்ச்சனை செய்விப்பதும், புறத்தே நின்று கும்பிடுவோர்க்குச் சுவாமிதரிசனஞ் செய்யவிடாது மறைப்பதும் அநர்த்தமான செயல்களென வுணர்ந்துபோலும், இப்பொழுது நடக்கும் மகோற்சவ காலத்திலே, மகா மண்டபத்துள் எவரும் புகுந்து வணக்கஞ் செய்யாது தடுக்கப்பட்டுள்ளனர்; இதுவே வணக்கத்திற்காகியமுறையுமாம்; மூல மூர்த்திக்கு அர்ச்சனைசெய்யும் ஆசாரியாரயினும், தாம் சுவாமியை வணங்க வேண்டிற் கொடித்தம்பத்திற்கு இப்பால் நின்றே வணக்கவேண்டுமென்பது சிவாலய தரிசன விதியாகும்; ஆனதால் அன்பர்கள் இவற்றை அவதானித்து வழிபடுவார்களாக; நல்லைக் கந்தக் கடவுளை வழிபடுமடியவர் தாமாகச் சிந்தித்துத் தவிர்க்கவேண்டியது இன்னுமொன்றுளது; அஃதென்னையெனில் கோவிலின் உட்பிரகாரத்தில்( உள்வீதியில்) அங்கப்பிரதக்ஷணஞ் செய்தலை ஒழித்துவிடுதலேயாகும்; இப்பிரதக்ஷண வணக்கம் முற்காலந் தொட்டு நடைபெற்று வருகின்றதுதானேயெனின், அப்படியன்று, அக் காலத்திலே இக்கோயிலிலே விநாயகக்கடவுளையும் வைரவக் கடவுளையுந் தவிரப் பரிவாரமூர்த்திகளில்லையாம்; ஆனால் இப்பொழுது உள் வீதியிலே தேவிமார்கோவில், சந்தான கிருஷ்ணர் கோவில்கள் முதலியன நவமாக அமைந்துள்ளன; அல்லாமலும் அக வீதியில் அங்கப்பிரதக்ஷணஞ் செய்தல் அங்கு நின்று வழிபாடுசெய்யும் ஏனைய அன்பர்கட்கு இடையூறுகின்றது; இதனை அன்பர்கள் நன்கு சிந்திப்பார்களாக. இந்த நல்லைக் கந்தர் கோயிலைப் பின்பற்றி ஏனைய தலங்களிலும் நித்திய நைமித்திகங்கள் நடைபெறுமாறு சைவ சமயத்திற்கு எவ்வகையான குறையுமில்லையாகும்.

卐

## ஆபத்திற் குதவாத் தன்மை

ஆபத்து வேளையில் உதவி செய்யாத மறத்தன்மை இந்நாட்டிலுள்ள சிங்களச் சாதியினரிடத்து இயல்பாக வுள்ளதா, இல்லையேல் இடையிட்டு வந்ததா என்று ஒரு ஆசங்கை பிறக்கிறது; ஏன்? இப்பொழுது இரண்டு கிழமை முடிதற்கு முந்திச் சிங்கள நாட்டிலே மூன்று இடங்களில் அநியாயமாக மூன்று மரணங்கள் நேர்ந்தன; முதலாவது பாணந்துறையிலுள்ள ஒரு கால்வாயில் நீராடச் சென்ற பள்ளிக்கூடச் சிறுவர் மூவருள் ஒருவன் தவறி நீருள் வீழ்ந்து "தத்தளி"க்க, மற்றைச்சிறுவர் அதனைக் கண்டு தங் கூட்டாளியை மீட்டுவிடும்படி, அந்த நேரத்தில் துவிசக்கரத்தில் அந்த மார்க்கமாக வந்த ஒருவனை மற்றை இருபின்னைகளும இரந்துகேட்க, அவன் ஆபத்திற் குதவி செய்யாமல் அவ்வூர்த் தலைமைக்காரனுக்குத் தெரிவித்துவிட்டுப் போனமை. இரண்டாவது அநுராதபுரத்துள்ள பள்ளிக்கூடத்திற் படித்த நாணவதி யென்னுஞ் சிங்களக் கன்னிகை பள்ளிக்கூடத்தி லிருந்து வீட்டிற்கு மீண்டு வரும் மார்க்கத்தில், அவள்மேற் காதல்கொண்ட ஒரு சிங்களவிடன் வழிமறித்து அவளைப் பலாத்காரஞ் செய்ய, அவள் உடன்படாது மறுக்க, அவன் அவளை வெட்ட, அவள் ஓலமிட, அந்த ஓலத்தைக் கேட்டுக்கொண்டு அந்த நேரத்தில் முடியான்ஸி என்னுமொரு சிங்கள மனுஷன் எவ்வகையான உதவியுஞ் செய்யாது போய்த் தலைமைக்காரனுக்குத் தெரிவிக்க, இதற்கிடையில் அந்தவிடன் அக் கன்னிகையை வெட்டிக் கொன்றுவிட்டமை. இச்செய்திகளை இப் பத்திரிகையின் ஆக்கஸ்ட் மாதம் 10-ந் தேதிப் பிரசுரத்தில் வெளியிட்டிருந்தோம்; இப்பொழுது பாணந்துறைக் கணித்தாகவுள்ள ஒரு கிராமத்தில் குஸ்மாவதி யென்னும் 12 வயதுச் சிறுமி கிணற்றிலே தண்ணீர் அள்ளும்போது, தவறிக் கிணற்றுள் வீழ்ந்து தத்தளிக்க, அவளுடைய தாய் ஓலமிடப் பலர் வந்து கூடிநின்று வேடிக்கை பார்த்தார்களே யொழிய, அப்பெண்ணை நீரிலிருந்து மீட்டிலர்; இவைகளை யெல்லாம உத்தேசிக்கும்போது இச்சாதியிடத்து சீவகாருண்ணிய மில்லையென்று தானே எண்ணக்கிடக்கின்றது! இப்படியான ஆபத்தேதும் எங்கள் யாழ்ப்பாணத்தில் நேர்ந்தால் இங்குள்ள தமிழ் மக்கள் உற்றவிடத்து உதவி செய்து உயிரைக் காக்கத் தவறுவார்களா? இங்குள்ள ஆண்களல்ல, பெண்கள்தாமும் இப்படியான ஆபத்து வேளையில் உதவிசெய்யத் துணிவார்களே. பௌத்த சமயத்தைப் போதிக்க வேண்டுமென்றும், சிங்கள மொழியைப் பரப்பவேண்டுமென்றும் பிரசங்கம் பண்ணிக்கொண்டு திரியும் சிங்கள அதிகாரிகளும் அபிமானிகளும், தம் சாதியார் சமயத்தார் ஆபத்துக் காலத்தில் உதவிசெய்து உயிரைக் காக்க வேண்டு மென்று போதித்து முழு மக்களையும் திருத்துவது நன்றன்றோ!

# உலகம்பலவிதக்கதை

(முற்றொடர் 18)

### "ஏழையழுதகண்ணீர் கூரியவாளொக்கும்"

"அவளுடைய கண்களிலிருந்து ஒருதுளி நீர் சிந்தினால், அது ஆரைப்போய்த் தாக்குமோ அறியேன் எனகின்றாள் என் அருமைத் தங்கை; ஆரைப் போய்த் தாக்குவது? ஒருவரையும் போய்த் தாக்காது; என்னைத்தான் வந்து தாக்கும்; என்னைத் தாக்கினால் என் கதியென்னாகும்; ஏழை யழுத கண்ணீர் கூரிய வாளொக்கும் என்று சொல்லுவார்கள்; ஏன், வனசா எனக்குத்தான் வாழ்க்கைத் துணையாயிருக்கவேண்டு மென்று பிடிவாதஞ் செய்கிறாளென்பதும் எனக்குப் புலப்படவில்லை; உலகத்திலே ஒரு பெண்ணுக்கு நூறு மாப்பிளளையைப் பேசுவதும், ஒரு மாப்பிள்ளைக்கு நூறு பெண்ணைப் பேசுவதுஞ் சகசந்தானே; உலகமிப்படியிருக்க, வனசா மாத்திரம் என விஷயத்தில் அழுந்தி நிற்கிறாள்; இதுவும் என் பொல்லாத காலந்தான்" என்று பத்மநாதன் தன்னளவிற் சிறிது நேரஞ் சிந்தித்துப் பெருமூச்சு விட்டுப் பின் கமலாட்சியைப் பார்த்து "தங்காய், வாழ்க்கைப்பட்டால் எனக்கு வாழ்க்கைப்படுவது இல்லாவிட்டாற் சுமமாவிருப்பதென்று வனசா பிடிவாதஞ் செய்வது எதற்காக?" என்று கேட்டான் பத்மநாதன்; "அண்ணா, உந்த ஒரு கேள்வியையும் நீங்கள் வனசாவிடமன்றோ கேட்கவேண்டும்; கேட்டால் அவள்தான் அதற்குப் பதில சொல்லுவாள்" என்று புன்சிரிப்புடன் சொன்னாள் கமலாட்சி. பின்னரும் வெகுநேரம் பத்மநாதன் யோசித்துவிட்டுக் கமலாட்சியைப் பார்த்து "தங்காய், நீ ஊருக்கு மீண்டுபோய் வனசாவிற்கு என்ன பதில் சொல்ல உத்தேசித்திருக்கிறாய்" என்று வினவ, அவள் "அண்ணா, என்ன பதில் சொல்வதென்றுதானே உங்களைக் கேட்கிறேன்" என்றாள். "தங்காய், என்னை நம்பிக் கவலையில்லாமல் ஊருக்குப் போ, ஒருவாரத்துள் உனக்குத் தவறாமல் இந்த விஷயமாக ஒரு கடிதமெழுதுவேன்" என்றான் பத்மநாதன்; "அப்படியானால், உங்கள் மைத்துனருக்கு நான ஒரு கடிதமெழுதிவிட்டு ஒருவார காலத்திற்கு இங்கேதானே தங்குகிறேன்" என்றாள் கமலாட்சி.

### உங்களுக்கு நமஸ்காரம்

கமலாட்சி சொன்னதற்குப் பதில் சொல்ல முடியாதவனாய், வலையில் அகப்பட்ட மானைபோலவும், தூண்டிலில் அகப்பட்ட மீன்போலவுஞ் சஞ்சலப்பட்டான் பத்மநாதன்; தங்கையைப் போ என்று சொல்லவும் மாட்டான்; தன்னுளத்திலுள்ளபடி அவளுக்குச் சொல்லவு மமாட்டான்; தங்கையின் கேள்வி நீதியானதென்பதை அவன் நன்கறிவான்; அவளுக்குத் தான் சமாதானஞ் சொல்லவும் முடியாதென்று சிந்தித்தான்;அவன் தன் உள்ளத்தை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு, கமலாவைப் பார்த்து "தங்காய், என்னை இப்பொழுது என்ன செய்யும்படி கேட்கிறாய்" என்று அழுத்திக்கேட்டான்; "அண்ணா, வேறொன்றுஞ்செய்யவேண்டாம்; வனசாவை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று ஒரு வாக்குச் சொன்னாற் போதும்" என்று களிவுடன் சொன்னாள், "அதனை நான் யோசித்துவிட்டுச்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## உலகம்பலவிதக் கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

சொன்னால் என்ன?" என்று தமயன் கேட்க, தங்கை "ஆருடன் அண்ணா, யோசித்துவிட்டுச்சொல்லப்போகிறீர்கள்? சாதாவுடனா" என்று குத்திரமாகக் கேட்டாள் "சாதாவோடல்ல, தங்காய், என்னவிற்றான் இன்னும் யோசிக்கவில்லைதேன்; சாதாவிற்கும் உண்மையைச் சொன்னால் அவன் கேட்டுக்கொள்ளுவான்" என்றான் பத்மநாதன்; எப்படியாயினும் யோசித்து ஒரு முற்றச் சொல்லுங்கள், அண்ணா" என்று பரிவுடன் சொன்னாள் கமலாட்சி. "சரி, தங்காய், என சொல்லைத் தட்டப் பயந்து, நீ மனம் வருந்துவாயென அஞ்சி, உன் கேள்விக்குச் சம்மதிக்கிறேன்" என்றான் பத்மநாதன்; "அண்ணா, என் அருமையான அண்ணா, உங்களுக்கு நமஸ்காரம்" என்று சொல்லிக் கும்பிட்டாள் கமலாட்சி; "சொன்ன சொல் தவறமாட்டீர்களென்பதை நான் அறிவேன்" என்று பின்னும் வற்புறுத்தினாள் கமலா. அந்த நேரத்தில் அவன் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையில்லை யெனலாம்; அவன் தமயனைப் பெரிதும் பாராட்டி, அவன் தனமீது வைத்த அன்பிற்குருகி, அன்று மாலைப் புகைரதத்தில் தான் மீண்டு ஊருக்கும் போக வேண்டுமென்ற நோக்கத்தைத் தெரிவித்தாள்; பத்மநாதன் அதற்கிசைந்து ஒரு மோட்ட ரதத்தை யொழுங்குசெய்து, தன் சகோதரியையும் அவளுக்குத் துணையாகவந்த பணிப்பெண்ணாகிய இலட்சுமியையும் இரதத்தில் ஏறச்செய்து, தானும் முன்னாசனத்திலிருந்து அவர்களுடன் போய்ப் புகைரத ஸ்தானத்தை யடைந்து, புகைரதம் வந்தவுடன் அவர்களை அதில் ஏறச்செய்து தம் கையிடம் அனுமதி பெற்றுக்கொண்டு தன் வாசஸ்தானத்திற்கு அதிக சிந்தனையோடு மீண்டான்; மீண்டவன் நித்திய கடன்களை யெல்லாம் முறைப்படி செய்தனனெனினும், அவனுடைய மனம் எந்த நேரமும் சஞ்சலத்தோடு கூடியதாகக் காணப்பட்டது; சாதாவை நினைப்பான், அவள் தன்மீது வைத்த காதலையும், இதமாக வூடாடுவதையுஞ் சிந்திப்பான்; சாதாவுக்கு என்ன சொல்வதென்று யோசிப்பான்; தனது தங்கைக்குக் கொடுத்த வாக்கையிட்டுப் பல முறையெண்ணுவான்; இவ்வாறு பத்மநாதன் சில தினங்களாக எண்ணாத எண்ணமெல்லா மெண்ணி யெண்ணி மனம் புண்ணானான்; வயிறார உண்டிலன்; கண்ணயர்ந்து நித்திரை கொண்டிலன்.

(வரும்)

## விசேஷ விஞ்ஞாபனம்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தேர் தீர்த்தத் திருவிழாக்களை யுத்தேசித்து, இச்சைவப்பிரகாச யந்திரசாலை, இந்துசாதனாலயமென்னுமிவற்றிற் கடமையாற்றுவோர்க்கு, வருகிற வெள்ளி சனிக்கிழமைகளில் (31-8-51, 1-9-51) விடுமுறை யுதவப்படுமாதலில், குறித்த இரு தினங்களிலும் இத்தாபனங்களில் எவ்வகையான கருமமும் நடவா; அடுத்த வெள்ளிக்கிழமை இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் வெளிவரா.

மனேஜர்.

## நமது சோதிடப்பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (2-9-51—8-9-51)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இவ்வாரத்தில் மன ஆறுதலில்லையாம் செய்யும் முயற்சிகளாலும் அதிக பயன் விளையாது; கிழமையின் கடைசி இரு தினங்களும் அவதானமாக நடந்துகொள்க.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்

பணவிஷயமாக இலாபந்தரும் வாரம்; ஆனல், உத்தியோக விஷயமாகவும் குடும்ப விஷயமாகவும் அற்ப பிணக்குக்கள் நேரக்கூடும்; சுற்றத்தார் மூலம் மனஸ்தாபம்நேர இடமுண்டு; அந்நியரால் இலாபமும் உதவியுமுண்டு.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

புது முயற்சிகளிற் சித்தியுண்டு; குடும்ப ஒற்றுமை சகோதரருக்குக் கேடென்னும் வகையாகும்; அவசரப்பட்டு எவரோடும் பிணங்கிக்கொள்ளவுஞ் சண்டையிடவுங் கூடாது. கிழமை முடிவிற் பொருள்வரவுண்டெனலாம்.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

குடும்பப்பிணக்கு, தேகசுகக் குறைவென்னுமிவைகள் நேரஇடமுண்டு; எவரோடும் வாது பேசவொண்ணாது; வார முடிவிற் பணவரவு மனஆறுத லென்னுமிவையுண்டு.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

இவ்வாரத்தில் வரவுக்கு மேற்பட்ட செலவுண்டாம்; உத்தியோக தானத்திற் பிணக்கு, மித்திருடன் மனஸ்தாபம் நேரக்கூடும்; கண்ணில் ரோகமுண்டாகும்; தேகசுகத்தைப் பேணுக.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

இவ்வாரத்தில் எதிர்பார்த்திராத லாபமுண்டாம்; புதிய கருமங்களை ஊக்கத்துடன் செய்க; பகைவர் மாறாச் செய்யும் முயற்சிகள் பலியாதொழிய, அவர்கள் அடங்கியிருப்பார்கள்.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3 ம் பாதம்.

நண்பருக்காக வேறெவருக்காக எவ்வகையான நன்றி செய்தாலும், அவர்கள் அதனை மறந்து புறங்கூறுவார்கள்; எழுத்து மூலம் எவ்வகையான பொறுப்புங் கொடுக்க வொண்ணாது; கிழமை முடிவிலே தூரமான இடத்திலிருந்து நல்லசெய்தி கிடைக்கக்கூடும்.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

சாத்திரக் கீர்த்தியும் இலாபமுமுண்டு; எடுத்த கருமத்தைத் தளர்ச்சியின்றிச் செய்க; இவ்வாரம் முடிவதற்கிடையில் பகைவர் தோல்வியடைவர்; ஆண்களாற் பெண்களுக்கும், பெண்களால் ஆண்களுக்கும் உதவியுண்டு; ஆனல் அபவாதங் கேட்கவும் நேரும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

பிதா வழியாரால் அல்லல்நேர இடமுண்டு; ஆனலும் நண்பர் தம்மால் இயன்ற உதவி புரிவர்; புகழும் பெரியோராற் சன்மானமுமுண்டு;

**மகராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

இது நன்மையான வாரமன்று; கடைசியிரு தினத்திலும் மிகச் சாவதானமாக வூடாடுதல் வேண்டும்; அவதானமின்றி நடந்தால் ஆபத்துக்காளாக வேண்டியும் நேரும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2 ம் 3-ம் பாதம்

கிழமையின் முற்பகுதியில் அவதானத்தோடு வூடாடுக; குடும்பப் பிணக்குண்டு; பழிகேட்கவேண்டி நேரும்; கிழமை நடுவிற் சில நன்மையுண்டாம்; பகைவரை வெல்லலாம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

தேகசுகஞ் சிறிது குன்றினும் இவ்வாரத்தில் நன்மையுண்டாம்; எண்ணிய வண்ணங் கருமம் நிறைவேறும்; பணலாபமுமுண்டு; புதன்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை முற்பகல்வரை சவதானமாக நடந்துகொள்க.

உ

## விவாக விஞ்ஞாபனம்

நிகழும் ஆவணி மாசம் 18உ (3-9-51) திங்கட்கிழமை இரவு 10 மணி வரை நிகழும் சுபமுகூர்த்தத்தில், கொழும்பு அரசாங்க ஸ்ரோரில், உத்தியோகம் வகித்திருப்பவரும், எங்கள் சிரேஷ்ட புத்திரனுமாகிய திருவளர் செல்வன் மகேந்திரனுக்கும், உடுவில் திரு. கா. மருதப்பரின் சிரேஷ்ட புத்திரி திருவளர்செல்வி இரத்தினேசுவரியம்மாளுக்கும், திருவருளை முன்னிட்டு விவாகஞ்செய்துவைக்கப் பெரியோர் நிச்சயித்திருப்பதால், அந்த மங்கல சமயத்திற் சுற்ற மித்திர சகிதமாக வந்து தம்பதிகளை வாழ்த்தும்வண்ணம் அன்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். [ அடுத்த நாட் பிற்பகல் மணமகளில்லத்தில் உபசரணை. ]

245. நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

சு. பொ. கந்தையா
மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை.

உ

## விவாக சோபன விஞ்ஞாபனம்

### பேரம்பலம் — விஜயலட்சுமி

நிகழும் கரஹூ ஆவணிமீ கஅஉ (3 - 9 - 51) திங்கட்கிழமை பகல் 11 மணியளவில், மயிலிட்டி திருவாளர் வேலுப்பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புத்திரன் - திருவளர் செல்வன் டக்ரர் பேரம்பலந்துக்கும், எனது புதல்வி திருவளர் செல்வி விஜயலட்சுமிக்கும் விவாகஞ் செய்து வைக்கப் பெரியோர்கள் திருவருளை முன்னிட்டு நிச்சயித்திருப்பதால், அத்தருணம் எனது சுற்றத்தவர்களும் நண்பர்களும் சமுகமாகித் தம்பதிகளை ஆசீர்வதித்துச் சந்தோஷங் கொண்டாடிப் போகும்வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்,
அ. தில்லையம்பலம்
24—8—51.

சங்கானை
வட்டுக்கோட்டை

M 85 28—8—51.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

L K S LEBBAY BROS
GOLD HOUSE
தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## பத்திரக்கிரய விபரம்

(1 வருட காலத்திற்கு)

| | இந்துசாதனம் தமிழ்ப்பிரசுரம் | | Hindu Organ ஆங்கிலப்பிரசுரம் | | இரு பிரசுரங்களும் | |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | சதம் | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பட்டின எல்லையுள் | 6 | 50 | 6 | 50 | 10 | 50 |
| உள்நாடு | 9 | 50 | 9 | 50 | 13 | 50 |
| இந்தியா-மலாய்நாடு | 10 | 50 | 10 | 50 | 15 | 00 |

# மகளிர் மன்றம்

## தாய்மார் அனுசரிக்கவேண்டிய சுகாதார முறைகள்

II

**கர்ப்பிணிகளின் உணவு:—** இக்காலத்தில் பெண்கள் தேகாரோக்கியத்தையும் உடம்பிற்கு வலிமையையும் கொடுக்கக்கூடிய உணவையே உட்கொள்ள வேண்டும். மிதமிஞ்சிய உணவு உண்ணவேண்டிய அவசியமில்லை. மேலும் பலவித "வைட்டமின்"களும் உப்புத்திராவகங்களுஞ் சேர்ந்த உணவுப் பதார்த்தங்களையும் பால், நெய் முதலியவற்றைத் தாய்மார் உட்கொண்டால் பிள்ளைகளின் எலும்பு, பற்கள் முதலியவை நன்றாக அமையும். இத்துடன் அப்பெண் சிறந்த காய்கறிகளையும் பழங்களையுமுட்கொள்ளலாம். மலச் சிக்கலைத் தடுத்தற்பொருட்டுத் தூய்மையான தண்ணீர் அதிகம் பருகவேண்டும். நன்றாய்ப்பழுக்காத பழங்களைக் கர்ப்பிணி அருந்தலே கூடாது.

**உடை:—** இக்காலத்தில் பெண்கள் மெல்லிய உடைகளைத் தளர்த்தி அணிவதே உத்தமம். இடையைச் சுற்றி இறுக்கமாக உடைகளை அணியக்கூடாது. மிதமிஞ்சிய நகைகளையும், குதியுயர்ந்த சப்பாத்துக்களையும் இக்காலத்தில் அணியாதிருத்தல் நலம்; அத்துடன் பாதசரம் ஒட்டியாணம் முதலியவற்றையும் அணிதல் கூடாது.

**தேகாப்பியாசம்:—** ஒரு கர்ப்பிணி சாதாரணமான சில அப்பியாசங்களைச் செய்தல்வேண்டும். அளவுக்கு விஞ்சிய வேலையில் ஈடுபடக்கூடாது. வீட்டு வேலைகளைச் செய்வதால் இவர்கள் போதிய அளவு தேகாப்பியாசத்தைப் பெறமுடியும். கர்ப்பிணிகள் அதிக பாரமான பொருள்களைத் தூக்கக்கூடாது. பந்தாட்டங்களும் உடம்புக்குத் தீமையைக் கொடுக்கும். பிற்பகலில் சிறிது தூரம் உலாவுவது நன்மையாம். உடம்பிற்கு அதிகக்களையைக் கொடுக்கக்கூடிய தேகாப்பியாசங்களை அறவே நீக்கிவிடவேண்டும்.

**ஆறுதலும் படுக்கையும்:—** கர்ப்பிணிகள் ஆறவேண்டியது மிக ஆவசியகம். வீட்டு வேலைகள் செய்த பின்னரும் உலாவிவந்த பின்னரும் அவர்கள் நன்றாக ஆறவேண்டும். அவர்கள் இரவில் அதிகநேரம் விழித்திருத்தல் கூடாது. காற்றோட்டமுள்ள அறைகளிற் சாளரங்களைத் திறந்து வைத்துச் சுத்தமான படுக்கையில் நித்திரை செய்ய வேண்டும். சுத்தமான காற்றும் பிராணவாயுவும் கருப்பையில் வளருங் குழந்தைக்கு மிக ஆவசியகமானவை; குழந்தை தேகாரோக்கியமுள்ளதாகக் கருப்பையில் வளர்வதற்குச் சூரிய வெளிச்சத்தையும் சுத்தமான காற்றையும் கர்ப்பிணி ஆவசியகம் பெறவேண்டும்.

**உடற்றூய்மை:—** கர்ப்பிணிகள் தங்கள் உடம்பை எப்பொழுதுந் தூய்மையாகவே வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் குளித்தல் நலம். குளிப்பதற்குத் தேகாரோக்கியமிடங் கொடாவிட்டால் ஈரத்துணியால் உடம்பைத் துடைத்துச் சுத்தமாக்கிக் கொள்ளலாம். குளித்த பின்னர் குளிர் பிடிக்காது ஆவதானமாக இருக்க வேண்டும்.

**கர்ப்பகால நோய்கள்:—** கர்ப்பிணிகள் தங்கள் தேகாரோக்கியத்தை விசேடமாகப் பேணவேண்டும். மலச்சிக்கல் ஏற்படாவண்ணம் இடையிடையே சிறு பேதி உட்கொள்ளலாம். ஏதும் நோய்கள் காணப்பட்டது உடனே சிறந்த வைத்தியரிடஞ் சென்று தக்க சிகிச்சைகளைப் பெறவேண்டும். சிலவேளை தாயின் கடுமையான நோய் காரணமாகக் குழந்தை கருப்பையிலேயே இறந்துவிடுகிறது. பல்வலி, புண், தோல் வியாதிகள், கண், காது முதலியவற்றிற் றோன்றும் நோய்கள் முதலியன கண்டால் அவற்றை உடனேயே மருந்துசெய்து நீக்கிவிட வேண்டும். இன்றேல் இந் நோய்கள் குழந்தையையுந் தாக்கும்.

இத்துடன் கர்ப்பிணி மாசத்திற் கொருதடவை சிறந்த வைத்தியரிடம் தன் தேக நிலையைப்பற்றிக் கூறிவருதல் நலம். எட்டு மாதங்கள் கிரமப மாதத்திற்கு இரு முறை வைத்தியரிடஞ் சென்று வரலாம். ஊரிலே மருத்துவசாலையுண்டேல், அங்கே இப்பெண்கள் செல்லலாம்.

மேற்கூறிய விதிகளை யெல்லாம் கர்ப்பிணி அவதானித்து வருவாளேயாயின், அவள் தன் குழந்தையின் தேகசுகத்தைப்பேணுவதுமல்லாமற் தனக்கு வரும் நோய்களையும் நீக்கிவிடலாம்.

# ரேடியோ

## * இசைத்தட்டு

**திருச்சி புதன் ஆகஸ்ட் 29**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இலஞர் டி எம் ஷண்முக சுந்தரம் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 உடுத்தரப்பள்ளிகளுக்கு 1 சதம்பம் * 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 அப்துல் கலில்கான் விசித்திரவீணை* 2 தமிழில்செய்தி 2 10 ராஜன் ஸர்க்காரின் கிளாரினெட்* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு 5 30 டி என் கப்புலக்ஷ்மி புல்லாங்குழல் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 05 அறிவிப்புகள் 6 10 கீதங்கள்கேட்டவை* 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 இசைச்செல்வம் 7 45 செய்திவிளக்கம் 8 அனுதாசிரமம் நாடகம் 8 30 குரல்வகை * 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 இலஞர் டி எம் ஷண்முகசுந்தரம்பாட்டு 10 முடிவு.

**திருச்சி வியாழன் ஆக 30**

7 10 ஆரம்பம் 7 15 தமிழில்செய்தி 7 30 மூவலூர் என் செல்லப்பா பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 காலைஇசை* 8 30 முடிவு.

12 30 உடுத்தரப்பள்ளிகளுக்கு 1 ராஜ விக்கிரமா * 1 15 பெண்ணுலகம் 1 30 சமார் பி நாராயணு* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 மகாராஜபுரம் விஸ்வநாதய்யர் * 2 தமிழில்செய்தி 2 10 அப்துல் கரீம்கான்* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப் பள்ளிகளுக்கு 4 30 முடிவு. 5 30 கோட்டுவாத்யம ஆ ஐ சேவித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருப்புகழ் 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 இலாகானம* 8 புத்தக விமர்சனம் 8 15 ராகம், தானம், பல்லவி சித்தூர் சுப்பிரமணியபிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 மூவலூர் என் செல்லப்பா பாட்டு 10 முடிவு.

**திருச்சி வெள்ளி ஆக 31**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 ஆம்பூர் அமிர்தவல்லி சுந்தரவல்லி பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 உடுத்தரப்பள்ளிகளுக்கு 1 சதம்பம்* 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 வீணை* 2 தமிழில்செய்தி 2 10 எச். எம். வி. ஸ்டுடியோ வாத்தியகோஷ்டி * 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு 5 30 டி என் கருணகிரி நாதஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள்கேட்டவை * 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சந்திரிகையின் கதை 7 45 இலக்கியவாசகம் 8 ஆம்பூர் அமிர்தவல்லி சுந்தரவல்லி பாட்டு 8 30 குரல்வகை * 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 டி என் கருணகிரி நாதஸ்வரம் 10 முடிவு.

## திருமுருகாற்றுப் படைச் சிறப்பு

1-ம் பக்கத் தொடர்ச்சி

நூற்பொருட் சுருக்கம்

எல்லாச் சமயத்தாரும் புகழும் பருதியங்கடவுள் கடலிலே தோன்றினாற்போல மனம் ஒன்றி நினைப்பாருள்ளத்திலே அறியாமையாகிய இருள் கெடும்படி மயிலின்மீதுதோன்றும் பேரொளிப் பிழம்பு முருகப்பெருமான்; அவன் தன்னையடைந்தாரது அறியாமையை நீக்கும் திருவடியுடையவன்; அழித்தற்கு உரியாரை அழிக்கும் கையினன்; அறக்கற்புள்ள தெய்வயானையம்மை மணாளன்; கடம்புமாலையுதிரும் மார்பினன்; சூரமகளிர் மிலையாடும் மலைப்பிற்றோன்றிய சுருமபுமூசாச் சுடர்ப்பூங்கண்ணிசூடியமுடியினன்; அசுரர் வலியடங்கச் சூரபன்மாவாகிய மாமரத்தைத் தடிந்த வேற்படையான். அவனது ஞானமயமாகிய திருவடிப்பேற்றை விரும்பும் உள்ளத்தோடு நீ செல்லவிருப்பதியாயின் நீ தவறாமல் அதனைப்பெறுவை. அவன் தன்னை அடைந்தார்க்கு அருளும் பொருட்டு வீற்றிருக்கும் இடங்களைக்கேள். மாடமலி மறுகினையுடைய கூடல்நகரின் மேற்கேயுள்ள திருப்பரங்குன்றத்தில் விருப்புடன் அமர்ந்துவான்.

அதுவன்றி, அவனுடைய ஆறு திருமுகங்களிலே ஒன்று உலகில் இருளை நீக்கவும், ஒன்று ஆர்வலருக்கு அவர் விரும்பிய வரங்கொடுக்கவும், ஒன்று அந்தணர் புரியும் வேதவேள்விக்குத் தீங்குவாராது நினைக்கவும், ஒன்று முனிவர்களுக்கு வேதாகமப் பொருளை அறிவுறுத்தவும், ஒன்று அசுரர் முதலியோரை அழித்துக் களவேள்விசெய்ய விரும்பவும், ஒன்று வள்ளிநாச்சியாரோடு மகிழ்ச்சியைப்பொருந்தவும், அம்முகங்களுக்கு ஏற்பப் பன்னிருகைகளும் பலவகைத் தொழில் புரியவும் திருச்சீரலைவாயிலும் வீற்றிருக்கின்றான்.

அதுவுமன்றி மரவுரி யுடையும், வானரை முடியும், மாசறு வடிவும், வாடியவுடலும், செற்றம்நீங்கிய மனமும், கற்றோரின் மேம்பட்ட அறிவும், சினமற்ற முனிவர்கள் முன்னே செல்லக் கந்தருவர்கள் இனிய யாழிசை பயிலக் கந்தருவ மகளிர் சூழத் திருமாலும் இந்திரனும் உருத்திரனும தத்தம் தொழில நிலைபெறவும் அயனைப் பழைய படைத்தற்றொழிலிலே நிலைநிறுத்தவும் விரும்பி முப்பத்து முக்கோடி தேவர் பதினெண் கணங்களுடன் வான்வழியாக வந்து காணும்படி தெய்வயானையம்மையுடன் திருவாவினன்குடி என்னும் ஊரிலும் இருத்தலுரியன்.

## சக்கரப் பள்ளித் தலச் சிறப்பு

1-ம் பக்கத் தொடர்ச்சி

சுவாமி : சக்கரவாகேசுவரர். அம்மை: தேவநாயகி. இருப்பிடம். ஐயம்பேட்டை நிலையத்திலிருந்து மேற்கே முக்கால் நாழிகை அளவில் அடையத்தக்கது.

— தருமபுர ஆதீனவெளியீடு. 246.

## புரட்டாதி மாச விசேஷ தினங்கள்

1. (17-9-51) திங்கள், மாதப்பிறப்பு.
2. (18-9-51) செவ்வாய், மகாபரணி. (வைரவ விரதம்).
3. (19-9-51) புதன, கார்த்திகை விரதம.
5. (21-9-51 வெள்ளி, திருநாளைப் போவார் குருபூசை.
12. (28-9-51) வெள்ளி, பிரதோஷ விரதம்.
13. (29-9-51) சனி, அருணந்தி சிவாசாரியார் குருபூசை.
14. (30-9-51) ஞாயிறு, மஹாளயபக்ஷ அமாவாசை. வல்லிபுரக் கோவில் கொடியேற்றம்.
15. (1-10-51) திங்கள, நவராத்திரி விரதாரமபம். வண் வேங்கடேசப் பெருமான் கோயில் கொடியேற்றம்.
21. (7-10-51) ஞாயிறு, சரஸ்வதி பூஜாரமபம்.
23. (9-10-51) செவ்வாய், மகா நவமி, சரஸ்வதி பூசை (ஆயுத பூஜை). ஏனாதிநாயனர் குருபூசை. நாகர்கோயில் கொடியேற்றம்.
24. (10-10-51) புதன, விஜய தசமி. (மானம்பு)
26. (12-10-51 வெள்ளி, பிரதோஷ விரதம்; நரசிங்கமுனையர் குருபூசை.
27. (13-10-51) சனி, கடேசாபிஷேகம்.
28. (14-10-51) ஞாயிறு, பூரணை விரதம, வல்லிபுரக்கோயில் சமுத்திர தீர்த்தம்.
29. (15-10-51) திங்கள், உருத்திர பசுபதி நாயனர் குருபூசை.
31. (17-10-51) புதன, கார்த்திகை விரதம்.

வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

திறமான தேக்கமரங்கள்

பல தினிசுகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

74 ஆஸ்பத்திரி ரோட்

யாழ்ப்பாணம்

Std 2

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Tuesday August 28, 1951